# 08 ஜூலை 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற மனிதர்கள்

### ரஷ்யா ஆற்றல் நிறுவனமான "ரோஸ் நெப்ட்", இந்தியன் ஆயில் நிறுவனத்தின் (ஐஓசி) முன்னாள் இயக்குனர் "கோவிந்த் கோட்டிஸ் சதீஷை" அதன் நிர்வாகக் குழு உறுப்பினராக நியமித்துள்ளது.



- ❖ தரவுகளின்படி, ரஷ்ய எண்ணெய் நிறுவனம் இந்திய நிறுவனங்களுக்கு ஒரு நாளைக்கு சுமார் 2 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை வழங்குகிறது.
- ❖ ரஷ்ய எண்ணெய் நிறுவனம், ரஷ்யாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு வயலில் இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் பங்கு வைத்துள்ளது.
- ❖ இந்திய நிறுவனங்களான இந்தியன் ஆயில் நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்கள் ரஷ்ய எண்ணெய் நிறுவனத்திடமிருந்து கச்சா எண்ணெயைப் பெறுகின்றன மற்றும் ரஷ்ய எண்ணெய் நிறுவனம் சமீபத்தில் குஜராத்தில் உள்ள சுத்திகரிப்பு ஆலைகளுக்கு நாப்தாவை ஏற்றுமதி செய்யத் தொடங்கியது.
- ❖ இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் 6 மில்லியன் டன் கச்சா எண்ணெய் வழங்க ரோஸ் நெப்ட் நிறுவனம் நீண்ட கால ஒப்பந்தம் செய்துள்ளது.
- ❖ பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (பிபிசிஎல்) மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (எச்பிசிஎல்) ஆகியவற்றை உள்ளடக்கிய பிற அரசுக்கு சொந்தமான சுத்திகரிப்பு நிறுவனங்களுடனும் இது கையாள்கிறது.
- ❖ சதீஷ் தற்போது இந்தியன் ஆயில் எல்என்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் தலைவராக உள்ளார்.

### வங்கதேச விடுதலைப் போராட்ட வீரர்களுடன் சேர, ராணுவ நீதிமன்றத்தை பணயம் வைத்த எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) கமாண்டர் மரணம்



- ❖ 1971 ஆம் ஆண்டு வங்காளதேச விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவிய முதல் இந்திய ராணுவ அதிகாரியாகக் கூறப்படும் எல்லைப் பாதுகாப்புப் படையின் (பிஎஸ்எஃப்) மூத்த தளபதி பரிமல் குமார் கோஷ், புதுதில்லியில் காலமானார்.
- ❖ பங்களாதேஷில், பங்களாதேஷின் உருவாக்கத்திற்கு போராடிய புகழ்பெற்ற இந்தியத்

தளபதிகளில் ஒருவராக மக்கள் அவரைக் கருதுகின்றனர், மேலும் "முக்தி வாஹினியின்" ஆரம்ப உருவாக்கத்தில் அவர் முக்கிய பங்கு வகித்தார் என்றும் மக்கள் நம்புகிறார்கள்.

- ❖ கோஷ், எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) இன் 92 வது பட்டாலியனின் தளபதிகளில் ஒருவராக இருந்தார் மற்றும் வங்காளதேசத்தின் சுதந்திர இயக்கத்தின் தொடக்கத்தில் திரிபுராவில் நியமிக்கப்பட்டார்.

## சர்வதேச ஸ்னூக்கர் போட்டிக்கு குன்னூர் மாணவர் தேர்வு



- ❖ சர்வதேச ஸ்னூக்கர் போட்டியில் விளையாட நீலகிரி மாவட்டம், குன்னூரைச் சேர்ந்த மாணவர் ஷாம் ஆல்வின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ❖ குன்னூரில் உள்ள ஸ்டேன்ஸ் மேல்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர் ஷாம் ஆல்வின் (15), சர்வதேச பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் சவூதி அரேபியாவின் ரியாத் நகரில், ஜூலை 7ஆம் தேதி முதல் நடைபெறும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான "உலக ஸ்னூக்கர் சாம்பியன் ஷிப்-2023" தொடரில் பங்கேற்கத் தேர்வாகியுள்ளார். இத்தொடரில் இந்தியா முழுவதிலும் இருந்து 8 பேர் பங்கேற்க உள்ளனர். இவரது மூத்த சகோதரி மரியம் ஆக்னஸ் தேசிய அளவில் நடைபெற்ற ஸ்னூக்கர் போட்டியில் இரண்டாவது இடம் பெற்றுள்ளார்.
- ❖ "ஸ்னூக்கர் விளையாட்டு கண்டுபிடிக்கப்பட்ட நீலகிரி மாவட்டத்திலிருந்து", ஷாம் ஆல்வின் சர்வதேச ஸ்னூக்கர் போட்டியில் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

## இரட்டை மலை சீனிவாசனின் 164வது பிறந்த நாள் (07 ஜூலை 1859)



- ❖ தான் பெற்ற கல்வியறிவைக் கொண்டு, ஆதிதிராவிடர்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போராடிய தாத்தா இரட்டை மலை சீனிவாசனின் 164 வது பிறந்த நாள்
- ❖ லண்டன் சென்று ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைச் சந்தித்த போதும், அச்சம் என்பதே இன்றி, அவருடன் கைக்குலுக்க மறுத்து, இந்தியாவில் நிகழ்ந்து வரும் தீண்டாமைக் கொடுமைகளை எடுத்துக் கூறியது தான் அவரது நெஞ்சுரம்.
- ❖ வட்டமேசை மாநாட்டில் அண்ணல் அம்பேத்கருடன் நகமும் சதையும் போல இணைந்து தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காகப் பேசினார்.

SHANMUGAM IAS ACADEMY

- ஒடுக்கப்பட்ட சமூகங்களின் விடிவுக்காக ஓயாமல் குரல் கொடுத்த திராவிடமணி இரட்டைமலை சீனிவாசனாரின் பங்களிப்புகளை நன்றியுடன் நினைவுகூர்வோம்.

## தமிழ்நாடு செய்திகள்

### "கலைஞர் மகளிர் உரிமைத்தொகை" பெற தகுதியுள்ளவர்கள் குறித்த தகவல்கள் தமிழக அரசு வெளியீடு

- பெண் அரசு ஊழியர்களுக்கு கிடையாது.
- பெண் எம்எல்ஏ., எம்.பி., உள்ள குடும்பத்திற்கு கிடையாது.
- 3,600 யூனிட் மின்சாரம் பயன்படுத்தும் குடும்பத்தில் உள்ள குடும்பத் தலைவிக்கு கிடையாது.
- ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்குள் வருவாய் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ஒரு குடும்ப அட்டைக்கு ஒருவருக்கு மட்டுமே உரிமைத்தொகை வழங்கப்படும்.
- பயனாளிக்கு 21 வயது நிறைந்திருக்க வேண்டும்.
- சொந்தமாக கார் வைத்திருப்போருக்கு உரிமைத்தொகை கிடையாது.
- 5 ஏக்கர் நிலம் வைத்துள்ள குடும்ப தலைவிகளுக்கு கிடையாது.
- குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவராக இருந்தால், அவரது மனைவி குடும்பத் தலைவியாகக் கருதப்பட்டு உரிமைத் தொகை வழங்கப்படும்
- திருமணமாகாத பெண்கள், கைம்பெண்கள் மற்றும் திருநங்கைகள் தலைமையில் குடும்பங்கள் இருந்தால், அவர்களும் குடும்பத் தலைவிகளாகக் கருதப்பட்டு உரிமைத் தொகை வழங்கப்படும்.

### தமிழ்நாடு வணிகர் நல வாரியம் மாற்றியமைப்பு

- தமிழ்நாடு வணிகர் நல வாரியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் பா.ஜோதி நிர்மலாசாமி பிறப்பித்துள்ளார்.
- தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலினும், துணைத் தலைவராக வணிக வரித்துறை அமைச்சர் பி. மூர்த்தியும் இருப்பார்கள்.
- அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர், வணிகவரி ஆணையர், நிதித்துறை முதன்மைச் செயலர், தொழிலாளர் நலத் துறை செயலர் ஆகியோர் இருப்பார்கள்.
- அலுவல் சாரா உறுப்பினர்களாக, 30 பேர் நியமனம் செய்யப்படுகின்றனர். மதுரை எஸ்.ரத்தினவேலு, சென்னைசேப்பாக்கம் வி.பி. மணி, வேலூர் ஆர்.ஜி.தர்மராஜ், திருச்சி எம்.கண்ணன், திண்டுக்கல் என்.செந்தில்குமரன், திருவண்ணாமலை எம்.சண்முகம் உள்பட 30 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டாண்டுகளாகும் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய செய்திகள்

### உலகளாவிய நெருக்கடி பதில் குழுமத்தின் சாம்பியன்ஸ் குழுவில் இந்தியா இணைகிறது

- உலகளாவிய நெருக்கடி பதில் குழுமத்தின் சாம்பியன்ஸ் குழுவில் சேர இந்தியா எடுத்த முடிவு, அதன் வளர்ந்து வரும் உலகளாவிய தலைமை மற்றும் அழுத்தமான உலகளாவிய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.
- ஐ.நா பொதுச்செயலாளரின் அழைப்பின் பேரில் இந்தியா உலகளாவிய நெருக்கடி பதில் குழுவின் (GCRG) சாம்பியன்ஸ் குழுவில் இணைந்துள்ளது. உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் நிதி ஆகியவற்றில் அவசர உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்கவும், உலகளாவிய பதிலை ஒருங்கிணைக்கவும் மார்ச் 2022 ல் உலகளாவிய நெருக்கடி பதில் குழு நிறுவப்பட்டது.

**முக்கிய தகவல்கள்**

- ஜி.சி.ஆர்.ஜி.யின் சாம்பியன்ஸ் குழுவில் சேர ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸிடமிருந்து இந்தியாவுக்கு அழைப்பு வந்தது.
- இந்த அழைப்பு இந்தியாவின் அதிகரித்து வரும் உலகளாவிய தலைமைத்துவத்தையும், சமகால உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கான அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

## சர்வதேச உறவு

### இந்திய பயண முகவர்கள் சங்கத்தின் 67வது மாநாடு கொழும்பில் ஆரம்பமானது

- இந்த மாநாடு பிராந்திய சுற்றுலாவை மேம்படுத்துவதையும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "எல்லைகளை மீறுதல், வாழ்க்கையை மாற்றுதல்" என்ற தொனிப்பொருளில், இந்திய வெளியூர் பயணிகளுக்கு விருப்பமான இடமாக இலங்கையை இந்நிகழ்வு நிலைநிறுத்துகிறது.
- இந்த மாநாட்டில், "வணிக அமர்வுகள் மற்றும் வாங்குபவர்–விற்பனையாளர் சந்திப்பு சந்தை" ஆகியவை பற்றி விவாதிக்கப்படும்.
- இந்த மாநாடு, நெட்வொர்க்கிங், தொழில் போக்குகள், மற்றும் வணிக வாய்ப்புகள் பற்றிய புதுப்பிப்புகளுக்கான தளத்தை வழங்குகிறது.

### தான்சானியாவின் டார் எஸ் சலாம் பகுதியின் கிபாம்பா வார்டில் இந்திய உதவியுடன் கட்டப்பட்ட தண்ணீர் திட்டத்தை ஜெய்சங்கர் பார்வையிட்டார்.

- ஆப்பிரிக்க நாட்டில் இந்தியாவின் ஆறு நீர் திட்டங்களால் நாட்டில் உள்ள 8 மில்லியன் மக்கள் பயனடைவார்கள்.
- இந்திய அரசின் "ஜல் ஜீவன்" இயக்கத்தில் காணப்பட்ட சுத்தமான குடிநீர் வழங்குவது, வெளிநாடுகளிலும் பிரதிபலிக்கிறது என்று டாக்டர் ஜெய்சங்கர் ட்விட்டரில் வலியுறுத்தினார்.

SHANMUGAM IAS ACADEMY